OS 258/2022
வா.சா.1 கவிமணி த/பெ கந்தசாமி
நாள் 16.09.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் பால் வியாபாரம் செய்கிறேன். எனக்கு மாத வருமானம் எவ்வளவு வருகிறது என்றால் ரூ.15,000/- முதல் ரூ.20,000/- வரை வருகிறது. பால் வியாபாரம் தவிர்த்து எனக்கு வேறு தொழில் இல்லை என்றால் சரிதான். நானும் பிரதிவாதியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து புதுப்பாளையம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். பால் வியாபாரம் வருமானத்தின் அடிப்படையில் தான் வழக்கு சொத்தை பொறுத்து பிரதிவாதிக்கு கடனாக கொடுத்தேன் என்றால் இல்லை சொத்தை வாங்குவதற்காக கொடுத்தேன். தாவா சொத்து பிரதிவாதிக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். தாவா வழக்கு பிரதிவாதி ரூ.2 லட்சம் வாங்கியதன் அடிப்படையில் தான் போடப்பட்டது என்றால் கிரைய அக்ரிமெண்ட் போட்டு ரூ.2 லட்சம் கொடுத்தேன். பிரதிவாதிக்கு ரூ.2 லட்சத்தை ரொக்க பணமாக கொடுத்தேன். பணம் கொடுக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் பிரதிவாதி, பிரதிவாதியின் மனைவி மலர் மற்றும் சாட்சி கையொப்பம் செய்த ஏழுமலை ஆகியோர் இருந்தார்கள்.

2. பிரதிவாதியை தவிர்த்து வேறு யாருக்கேனும் கிரைய ஒப்பந்தம் போட்டிருக்கிறேனா என்றால் போட்டிருக்கிறேன். கிரையம் வாங்கியிருக்கிறேன். நான் இந்த வழக்கில் முன்பணத்தை திருப்பி கேட்டு மாற்றுப்பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை கிரையம் செய்து கொடுக்க வேண்டி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதியில் ஆவணம் எழுதப்பட்டது என்றால் 07.06.2019ம் ஆண்டு ஆகும். மீதி கிரையத்தொகை ரூ.1 லட்சத்தை எந்த தேதியில் கொடுப்பதாக ஒப்புக்கொண்டேன் என்றால் தேதி நியாபகம் இல்லை 30 மாதங்களுக்குள் கொடுப்பதாக ஒப்பந்தம் போட்டிருந்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் பிரதிவாதி எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். முதல் சாட்சி கையொப்பம் யார் போட்டது என்றால் ஏழுமலை ஆகும். நான் சொல்வது போல் பிரதிவாதிக்கு ரூ. 3லட்சத்திற்கு கிரைய ஒப்பந்தம் போடவில்லை என்றாலும் ரூ. 2லட்சம் கடனுக்காக ஒப்பந்தம் போடப்பட்டது என்றாலும் சரியல்ல.

3. ரூ.2லட்சம் கடனுக்கு 2019 ஜூன் மாதம் முதல் 1 வருடம் வரை ரூ.6,000/- வீதம் வட்டி கட்டியிருக்கிறார் என்றால் இல்லை. என்னிடம் கடன் வாங்கியதற்காக அடமானம் ஆக தான் ஆவணம் எழுதி கொடுத்தார் என்றாலும் பிரதிவாதிக்கு கிரையம் எழுதி கொடுக்க விருப்பம் இல்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு எழுத படிக்க தெரியாது என்றாலும் கடனுக்காக ஆவணம் எழுதாமல் கிரைய ஒப்பந்தமாக நான் தான் ஆவணம் எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எந்த தேதியில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் தேதி நியாபகம் இல்லை 60 நாட்களுக்கு முன்பு அனுப்பியிருந்தேன். பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார் எந்த தேதியில் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் தேதி நியாபகம் இல்லை. கிரைய ஒப்பந்தம் தவிர நான் பிரதிவாதியிடமோ அல்லது அவரது மனைவியிடமோ எந்த ஆவணத்திலும் கையெழுத்து வாங்கவில்லை. பிரதிவாதிக்கும் எனக்கும் ஏற்கனவே கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இல்லை.

4. பிரதிவாதிக்கு தாவா சொத்தை தவிர்த்து வேறு சொத்து இருக்கிறதா என்றால் தெரியாது. மீதி கிரையத்தொகை ரூ. 1 லட்சத்தை நீதிமன்றத்தில் எந்த தேதியில் வைப்பீடு செய்தேன் என்றால் தேதி நியாபகம் இல்லை வைப்பீடு செய்திருக்கிறேன். நீதிமன்றத்தில் எனது தரப்பில் எத்தனை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 1 தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த தேதியில் பணம் தயாராக வைத்துக்கொண்டு இருந்தேன் பிரதிவாதி கிரையம் செய்து கொடுக்க மறுத்தார் என்றால் 2 மாதங்களுக்கு முன்பு தயாராக இருந்தேன். எனது வங்கி கணக்கை எதற்காக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பணம் இருப்பதற்காக தாக்கல் செய்திருக்கிறேன். பிரதிவாதி குடும்ப சூழ்நிலை காரணமாக கடனாக வாங்கியதை பயன்படுத்தி நான் கிரைய ஒப்பந்தமாக எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.